வெளியீடு I.

# குருகுல வரலாறு.

ஸ்ரீ கூ. சுப்பிரமணிய ஐயர்,
B.A.
அவர்களின்
அன்பளிப்பு

குருகுல நூற்பதிப்புச்சங்கம்,

அப்பச்சிமார்மடம்.

# குருகுல வரலாறு.

தொகுப்பாளர்,

ஈரோடு, சந்தச்சரபம்,

**S. வேல்சாமி கவிராயர் அவர்கள்.**

கோபிசெட்டிபாளையம்,

வழக்கறிஞர், உயர்திருவாளர்,

**K. T. வெற்றிவேல் முதலியார் B. A. B. L.,**

அவர்கள், முகவுரையுடன்,

அப்பச்சிமார்மடம்,

குருகுல நூற்பதிப்புச் சங்கத்தாரால் வெளியிடப்பட்டு

ஈரோடு சிவராம விலாஸ் பிரஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1934.



அப்பச்சிமார்மடம் அதிபதியும், திங்களூர்

பட்டக்காரருமான, உயர்திருவாளர்,

**M. A. ஆண்டமுத்துக் கவுண்டர் அவர்கள்.**

# முகவுரை.

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனி சிறந்தனவே" என்பது தேசிய விரஞ்சிறந்த தமிட்பெரும் புலவர்க் காசராம் பாரதியின் சிறந்தவாக்கு. இச்செம்மொழிக்கிணங்க தாய் நாட்டின்மீது பற்றில்லா மக்களோ, மாக்களோ, இந்திய நாட்டி லன்றி ஏனைய நாடுகளிலும் இல்லையென்றே கூறலாம். இந்நிலை யில் நமது தாய்நாட்டின் சரித்திரத்தை உள்ளது உள்ளவாறு அறி தல் யாவருக்கும் இன்றியமையாததே. தேசத்தை ஆண்டுவந்த மக்களின் சரிதமே தேசசரித்திரம். மக்களின் வாழ்வுந்தாழ்வுமே நாட்டின் வாழ்வுந்தாழ்வுமாகும். இந்நிலையில் தேசத்தை ஆண்டு வந்த வேந்தர்களின் சரிதத்தை அறியவேண்டுவது அவசியத்திலும் மிக அவசியமே.

குருகுலத்தாரில் முதன்மையான வேட்டுவர்கள் தமிழ்நாட் டிலே, சிறப்பாகக் கொங்குநாட்டிலே பல பாகங்களிலும் ஆதிக்கஞ் செலுத்திச் சிற்றரசர்களாகவும், குறுநிலமன்னர்களாகவுமிருந்து அரசநீதி வழுவாது ஆண்டுவந்திருக்கிறார்களென்பது சரித்திரம். இவர்களுடைய குலதெய்வமாகிய காளிகாதேவியின் புராதன கோ வில்கள் அநேக ஊர்களில் இன்றும் பார்க்கலாம். இக்குலத்தாருக்கு இதர கோவில்களிலுங்கூடப் பல முதன்மைகள் உண்டு. இன்னோ ரன்னபிறவும் இக்குலத்தாருடைய பண்டைய ஆதிக்கத்திற்குச் சிறந்த அத்தாக்ஷி யளிக்கின்றது.

"குருகுல வரலாறு" போன்ற நூற்கள் மிகச்சில. இத்தகைய நூற்கள் எழுதுதல் யாவருக்கும் எளிதன்று. கல்வெட்டுக்களிலும், செப்புச்சாசனங்களிலும், சரிதஉண்மைகள் மலிந்துகிடக்கும். தவிற கர்ணபரம்பரைக்கதைகளிலும், தனிப்பாடல்களிலும் புற நானூறு போன்ற இலக்கிய நூல்களிலும், புராணங்களிலும், சரித் திரக்குறிப்புக்கள் பல கற்பனைகளுக்கிடையில் புகுந்துகிடக்கும். இவைகளையெல்லாந் துருவியெடுத்து உண்மையை வெறுங் கற்பனை யிலிருந்து பிரித்து ஒரு வரலாற்று நூலாக தொகுத்துரைத்த இவ் வாசிரியருக்கு நாம் பெரிதுங் கடப்பாடுடையோம்.

இந்நூல் எளியநடையிலும், இனிய போக்கிலும் தலைசிறந்து விளங்குகிறது. இதுபோன்ற பல வரலாறுகளைத் தமிழுலகுக்குத் தந்தருளித் தமிழ்த்தொண்டாற்றப் போதிய ஆற்றலையும், ஆயுளையும் ஆசிரியருக்கு அருளுமாறு இறைவனை இறைஞ்சுகின்றேன்.

கோபிசெட்டிபாளையம்,
17—5—34.

K. T. வெற்றிவேல்.

# முன்னுரை.

"குருகுல வரலாறு" என்ற இச்சிறுநூல் கொங்குநாட்டை யாண்ட குருகுல (வெட்டுவர், பூவலவர், காவலவர், மாவலவர், வேடர்) வேந்தர்களின் உண்மைச் சரிதத்தையும், இவர்களின் நாடு, நீதி, வீரம், கொடை, நட்பு, கல்வி, நன்றிமறவாமை, அடக்கமுடைமை, தமிழறிஞர்களை ஆதரித்துவந்த பெருமை, முதலியவற்றையும் உள்ளது உள்ளவாறு உணர்த்துவது. கொங்குநாட்டை அரசாண்டுவந்த ஒரு குலத்தினரைப்பற்றியும், அவர்களது வீரம், ஆட்சி, இவைகளைப்பற்றியும். அப்பரம்பரையினரேயன்றி ஏனைய மக்களும், நாட்டினரும் அறிந்துகொள்ளுதல் மிகமிக அவசியமாகும். இப்போவசியத்தைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்ற பெருநோக்கமே இச்சிறுநூலில் உற்பவத்திற்குச் சிறந்த காரணம்.

குருகுலத்தினரின் வரலாற்றை, குருகுல காவியம், பஞ்சவர்ண ராஜகாவியம் திருச்செங்கோட்டுப்புராணம், திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை, கொங்குமண்டல சதகம், புறநானூறு, திருச்செங் கோட்டு மான்மியம், கருவூர் புராணம், சில பழஞ்சுவடிகள், இவைகளினின்று திரட்டி, கல்வெட்டுகள், சிலாசாசனங்கள், செப்பேடுகள், ஆகியவற்றை ஆராய்ந்து சேர்த்துப் பிரசுரித்திருக்கிறேன். குருகுரு மகாஜன மகாநாட்டிலேயே இதனை வெளியிடவேண்டிய முக்கிய அவசியமேற்பட்டதாலும், இன்னுஞ்சில விஷயங்கள் ஆராய்ச்சியிலிருந்துகொண்டிருப்பதாலும், யாவற்றையும் முடித்து வெளியிட வியலாது போயிற்று. இக்காரணம்பற்றியே பூவலவர், வேடர், மாவலவர், காவலவர் ஆகிய குலத்தினரின் சரிதமும் விளக்கமாகப் பிரசுரிக்கமுடியவில்லை. அடுத்து வெளியிடவிருக்கும் விரிவான பதிப்பில் மேற்கூறியவற்றையும், குருகுல மக்களும், கொங்கு நாட்டபிமானிகளும் மனமுவந்தனுப்புகின்ற சரித்திர, சாஸனங்களையும் அன்புடனேற்றுப் பிரசுரிக்கத் தீர்மானித்துள்ளேன். ஆதலால் சமூக சம்மந்தமான சாஸனங்கள் சரிதங்கள் கிடைக்கப்பெற்றோர் நமக்கனுப்புவீர்களாயின் மிக்க நலம்.

இந்நூல் வெளிவருவதற்குச்சிறந்த காரணமாயிருந்தவர், மடாதிபதியும், திங்களூர் பட்டக்காரரும், குருகுலப்பிரமுகரும், ஜில்லா

போர்டு மெம்பரும், கோவை ஜில்லா அர்பன்பாங்கி உதவித்தலை வரும், பொதுநலச்சேவையாளருமான அப்பச்சிமார்மடம் உயர் திருவாளர் M. A. ஆண்டமுத்துக் கவுண்டர் அவர்கள். குலமுன் னேற்றத்திற்காகவும், கொங்குநாட்டின் உண்மைச் சரிதத்தை வெளியிடவேண்டுமென மேற்கொண்டுள்ள இவரது தனிப்பெரும் முயற்சிக்காகவும், குலகுலமரபினரேயன்றிக் கொங்குநாட்டினரும் எல்லோரும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள். இவ ருக்கு இறைவன் இன்னருள் புரிவாராக.

இந்நூலுக்கு முகவுரை எழுதியுதவிய தமிழறிஞரும், வழக் கறிஞருமான, கோபிசெட்டிபாளையம், உயர்திருவாளர் K. T. வெற்றிவேல் முதலியார் B. A., B. L., அவர்களுக்கும், ஆராய்ச்சி காலத்தில் சிரமம்பாராது சாசனங்கள், கல்வெட்டுகள், பழஞ்சுவடிகள், புத்தகங்கள் ஆகியவற்றைத் தயாரித்துதவியதின்றி, என்னுடன் கூடவிருந்து மனமகிழ்வோடு அவ்வப்போது உதவி யளித்த அப்பச்சிமார்மடம் உயர்திருவாளர் M. A. காளியண்ண கவுண்டர் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

சாபநிலையம்,
17—5—34.

S. வேல்சாமி,
ஈரோடு.

வெல்ககாளி.

# குருகுல வரலாறு.

## எண்சீர் விருத்தம்.

முத்திதருஞ்சத்துருசங்காரிருக்ரி
 முக்கணிசற் குணவிமலி யருளா னந்தி
நர்த்தமிடும் அரன்காதத்தி லுதித்த மைந்தர்
 நலமாகப்பருவதமாங்கயிலைதன்னை
பத்திரமாய்க் காத்திடும்பூ வலவன் வேடன்
 பார்புகழும் வெட்டுவன்கா வலவன் சீல
வித்தைமிகும் மாவலவன் சரிதங் கூற
 வேண்டுவோர் தானுதவிக் காப்பா ளின்றே.

(பஞ்சவர்ண ராஜகாவியம்.)

## பாரத நாடு.

இப்பரந்த வுலகம் பல தேசங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் நமது இந்திய நாடுமொன்று. இந்திய நாட்டைப் பாரதநாடு, புனிதநாடு, பொன்னாடு யெனப் பல பெயர்களிட்டு அழைக்கப்படுகின்றது. விவசாயம், வியாபாரம், கைத்தொழில், போன்ற துறைகளில் இந்திய நாட்டினரே தலைசிறந்து விளங்கினரென்று நமது பண்டைநூற்களும், அந்நிய நாட்டாரின் நவீன நூற்களும், போதிய சாட்சியளிக்கின்றன. வியாபாரத்திற்கென, தற்காலம் போன்ற கப்பல்வசதியில்லாத அக்காலத்தில், கடல்கடந்து அந்நிய நாடுகளுக்குச்சென்று, பொருள்திரட்டி இந்திய நாட்டைப் பொன்னாடாக விளங்கவைத்தனர். உலோகப்பொருள்களை நிலத்திலிருந்து எடுத்து நகைகள், பாத்திரங்கள், பண்டங்களாகச்செய்து உபயோகித்த தனிப்பெருமை நமது இந்திய நாட்டினருக்குத்தானுண்டு. சுருக்கிக்கூறுவோமாகில் இந்திய நாடொன்றே இவ்வுலகத்திற்குச் சிறந்த வழிகாட்டியாக இருந்துள்ளது.

இத்தகைய மேம்பாட்டினை இந்திய நாட்டினர் கொண்டு விளங்கியதற்குத் தகுந்த காரணகர்த்தர்கள் அன்று அரசுபுரிந்து வந்த மன்னர்களே யாகும். "மன்னனைப்போல் தேசம், மாதா போற் பிள்ளை" யென்ற பழமொழிப்படி நாட்டினர் நன்மைபுரிவதும், தீமை புரிவதும், அரசனின் நடத்தையைப் பொருத்திருக்கிறது. எதிரிகள் வந்து சூழ்ந்துகொண்ட காலத்தில் மன்னன் உத்திரவுப்படி அதிரச்செய்யும் முரசின் வொலியையும், எக்காள வொலியையுங்கேட்டு, குடிகள் படையாகத் திரண்டு எதிரிகளைத் துறத்தி மன்னனை மகிழச்செய்ய முற்படுவது அரசன் குடிகளிடங் காட்டும் உண்மை அன்பினால்தான். இத்தகைய முறையில் அரசுரிமை நடாத்திய இந்தியநாட்டு இறைவர்கள் பலர். அவர்களில் தலைசிறந்து விளங்கியவர்கள் சந்திரகுலமன்னர்கள்.

வீரமே உருவாகத் திரண்டு தோன்றியவர்களும், வீரத்தை இந்திய நாட்டிற் ஸ்தாபித்தவர்களும், சந்திரகுல மன்னர்களென்பதை உலகசரித்திரமும், பாரத—பாகவதாதிகளும் பகருகின்றன. இவர்கள் அரசுபுரிவதையும், எதிரிகளேற்பட்டகாலத்து போர்புரிவதையுமே சிறந்ததாகக் கொண்டவர்கள். ஆயினும் தங்களுக்கு எதிரியாகத் தோன்றிய எவனையும், மறைமுகமாக விருந்து தாக்குவதென்ற பழிதொழில் இவர்களுக்கிருந்ததே யில்லை. எதிர்ப்பு ஏற்பட்டால் நேர்முகமாக நின்று தங்கள் வீரத்திறமையைக்கொண்டு எதிரிகளைத் தோற்கடித்து வெற்றியடைவதே இவர்களின் உண்மைத்தர்மம். இத்தகைய வீரப்பெருமை சந்திரகுல மன்னர்களுக்கே வுரியது.

## குருகுலம்.

சந்திரகுல மன்னர்களைக் குருகுல மன்னர்களென்றும் அழைப்பதுண்டு. சந்திரகுல மன்னனான புரூரவர்மன் வழித் தோன்றிய யயாதி ராஜனுக்கு குரு யென்ற புதல்வனொருவனிருந்தான். இவனுக்குக் கல்வி கேள்வியிற்சிறந்த பயிற்சியும் ராஜ்ய பாரம் நடத்துவதில் தகுந்த பாண்டித்தியமும், எதிரிகளைத் தோல்வியுறச்செய்து வீரக்கொடி நாட்டி, வெற்றிபெறுவதில் மிகத்திறமையுமுண்டு. இப்புகழ்படைத்த மன்னனின் வழிவந்த யாவருக்கும்

"குருகுலத்தார், குருகுல மன்னர்," யென மற்ற பெயர்களும் வழங்கப்பட்டன.

இக்குருகுல பரம்பரையில் கௌரவர்கள், பாண்டவர்கள், தோன்றினர். இக்குருகுல பாண்டவர்களின் கொடி ஒரு காலத்தில் இந்திய நாட்டிலன்றி இவ்வுலகெங்கும் பறந்ததுண்டென்பதற்குப் பாண்டவர்களிலொருவரான யுதிஷ்டிரன் புரிந்த "இராஜசூய யாகம்" ஒன்றே சிறந்த அத்தாக்ஷியாகும். இதுவன்றிப் பரதன் என்ற சந்திரகுல மன்னன் இந்திய நாட்டைப் பரிபாலித்து வந்த காரணங்கொண்டே நமது இந்திய நாட்டிற்குப் பரதநாடு, பாரதநாடு யெனப்பெயரிடப்பட்டது. இதிலிருந்து குருகுலத்தினரின் வீரம், போர்வலிமை, அரசுத்திறண், எதிரியின்மை, போன்ற உண்மை ஆதிக்கத்தை நாம் நன்குணரப்பாலது. சகோதரபான்மையுள்ள கௌரவ, பாண்டவர்களுக்குள் நாட்டின் காரணமாகவும், பாண்டவர்களின் மேட்டிமை காரணமாகவும் பிணக்கு ஏற்பட்டது. கௌரவர்கள் பாண்டவர்களைக் கொடும் விரோதிகளாகப் பாவித்தனர். பல வஞ்சகத் தீஞ்செயல்களை வகுத்தனர். சாம, பேத, தான, தண்டமெனுஞ் சதுர்வித வுபாயங்களைப் புரிந்தனர். அவைகளின் விளைவே பாரதப் போர். குருகுலப்போரென்றுஞ் சொல்லுவதுண்டு. பாண்டவ, கௌரவர்களின் இப்பெரும் போரைப் பேசாதார் சிலரே யாவர். இப்போரிற் பல லக்ஷங் குருகுல வீரர்கள் உயிர் நீத்தனர். பலகோடிப்பொருள்கள் விரையமாயின. இச்சண்டையொன்றே சிறப்பாக குருகுலத்தினரின் வீழ்ச்சிக்கும், பொதுவாக பரத நாட்டின் குறுக்கத்திற்கும் காரணம். வெற்றி பெற்ற பாண்டவர்கள் வேந்தராக விளங்கினர்.

பாண்டவர்களுக்குப் பின்னர் குருகுல பரம்பரையினர் க்ஷீணித்தனர். பல விரோதிகளேற்பட்டுச் சண்டையின் காரணமாகவே வடநாடு விட்டுத் தெற்கு நோக்கி வந்து பெத்தாப்பிநாட்டை, உடுப்பூர் என்ற தலை நகரிலிருந்து அரசாண்டனர். இக்கால முதல் குருகுலத்தினர் முன்போல் முன்னேறவாரம்பித்தனர். இங்கு மன்னனாக விருந்தவர்கள் அநேகர். அவர்களில் மிகச் சிறந்தவன் நாகராஜன். இவரின் தெய்வபக்தி, விருந்தோம்பல், சீரிய ஆட்சி, முதலிய ஒழுக்கத்தினைப்பற்றி இன்றும் பல நூற்கள்

புகழ்ந்து கூறுகின்றன. இவருக்குக் குலதெய்வம் காளிதேவி. எக்காரியத்திலிறங்குவதாயினும், காளிதேவியின் அருள் பெற்றே இறங்குவதென்ற விரதம்பூண்டவர். இவர் காலத்தில் குருகுலத்திற்கே சிறந்த புகழ் பெருக வாரம்பித்தது. ஆனால், புத்திரப்பேறின்றி இவர் விசனக்கடலில் வீழ்ந்திருந்தார்.

காளிதேவியின் கருணைப்பெருக்கால், இவரது மனைவி தத்தையென்பவள் ஓர் ஆண் மகவை யீன்றனள். திண்ணன் எனப் பெயரிடப்பெற்ற அச்சிறு குழந்தை இளமைக் காலந்தொட்டே நல்லொழுக்கத்தையும், கல்வியையும், உலகானுபவத்தையும் பழகியதின்றி, வில்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம், முதலிய துறைகளிலும் மிகத் தேர்ச்சியுற்று வீர வாலிபனாக விளங்கினான்.

ஒருநாள், நாணன், காடன் எனும் இருவர்கள் பின்தொடர திருக்காளத்திமலைச்சாரலில் வேட்டையாடிக்கொண்டு சென்ற திண்ணன், அங்கு குடுமித்தேவரைக் கண்டு, ஆராக்காதல் கொண்டு, பக்தி மேலீட்டால் தேவருக்கு இறைச்சியமுது படைத்துப் பூசிக்குந்தருணம், அவர் திருக்கண்ணிலிருந்து இரத்தம் பெருகுவதைக்கண்டு மனம்பொறாமல், தன் கையிலிருந்த அம்பினால் தனது கண்ணைக் களைந்து வைத்து அப்பினார். பின்னர், தேவரின் மற்ற விழியும் இரத்தம் சொரிய, அக்கண்ணையும் அடைப்பான்வேண்டித் திண்ணன் தனது மற்றொரு கண்ணையும் களைந்தெடுக்க ஆரம்பிக்குஞ்சமயம் "நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப!!" வென்று குடுமித்தேவர் திருவாய்மலர்ந்தருளி தனதின்னருளைப்பாலித்தார். காளத்திநாதனினருள் பெற்றதிண்ணன் அன்று முதல் "கண்ணப்பன், கண்ணப்பன்" என்றழைக்கப்பட்டான். (இவரது சைவசமயப் பற்றும் சிவபக்தியும் அளவிடற்பாலதன்று. பெரிய புராணங்கூறும் கண்ணப்ப நாயனார் இவரே. இவரது சிலையைச் சிவஸ்தலங்களில் வைத்து இன்றும் பூஜிக்கின்றனர்.) நாகராஜன் காலகதியடைந்த பின்னர் பொத்தாபிநாட்டைக் கண்ணப்பன் பரிபாலிக்க மகுடஞ்சூட்டப்பெற்றான். இவன், குருகுலத்தின் புகழை நாடெங்கும் நாட்டுவதைக் கண்ட மற்ற நாட்டரசர்கள் நடுங்குற்றனர். அந்நிய நாட்டரசனை விரட்டி அவனது நாட்டைக்கைப்பற்றவேண்டுமென்ற ஆசை

இவனுக்கு யிருந்ததேயில்லை. அந்நிய மன்னர்களுக்குத் துன்பம் நேரிட்ட காலத்து; உதவிபுரிந்து துன்பத்தை விலக்கமட்டும் ஆசைப்பட்டிருந்தானென்று கண்ணாராஜனின் சரிதம் கூறுகிறது.

## தமிழ் மூவேந்தர்கள்.

இக்காலத்தில் தென்னாட்டைச் சேரன், சோழன், பாண்டியன் என்ற தமிழ் வேந்தர்கள் மூவர் அரசாண்டுவந்தார்கள். இவர்களிற் சிறந்து விளங்கிய பாண்டிய மன்னனின் நாட்டில், ஒட்டியர், சல்லியர் என்ற கொள்ளைக்காரர்கள் புகுந்து, குடிகளைத் துன்புறுத்தியதின்றி, அரசுரிமையையுங்கூட கைப்பற்ற முயற்சித்தனர். தகுந்த பக்கபலமில்லாத பாண்டியன் தனக்கு வுதவியளிக்கத் தகுந்த மன்னர்களைத்தேடி யலைந்து, இறுதியாக பெத்தாப்பிநாட்டு மன்னனான கண்ணப்ப மன்னனை யணுகித் தனக்கு உதவி புரியும்படி வேண்டிக்கொண்டான். கண்ணப்ப ராஜன் பாண்டியன் முறை கேட்டு மனமிறங்கி, தனது குருகுலப்படையுடன் தென்னாடு வந்து பாண்டியனின் விரோதிகளை விரட்டியடித்து வெற்றி பெற்றுப் பாண்டிய நாட்டைப் பாண்டியனுக்கே பட்டாபிஷேகம் பண்ணிவைத்தார். இத்தகைய வுதவிபுரிந்த கண்ணப்ப மன்னனுக்குக் கைமாறாகத் தனது கோங்குநாட்டைப் பரிசளிப்பதாகவும், அதனை எற்றுக்கொள்ளுமாறும் வேண்டினான். அதுகேட்ட கண்ணப்ப மன்னன் "உதவிபுரிந்ததற்குக் கைமாறாக உங்கள் நாட்டை ஒப்புக்கொள்ளோம்" யென மறுத்து, உடுப்பூருக்குச்சென்று ஒரு நூற்றாண்டிருந்து ஒண்ணுதலாள் பாகன் ஒள்ளிய மலரடியைச் சேர்ந்தான்.

இவர் காலத்துக்குப் பின்னர் இவரின் புதல்வனான விஜயராஜன், நாகவல்லி என்பவளை மணந்து, அரசுபுரிந்து வருநாளில் ஆண்மகவொன்று பிறந்தது. அக்குழந்தைக்குக் காளத்திமன்னன் எனப்பெயரிட்டனர் இவன் பருவகாலத்தில் சகல கலைகளையுங் கற்றுணர்ந்து, பட்டமும் சூட்டப்பெற்றான். இவன் மகனுக்கு முத்தண்ராஜன் எனப்பெயரிட்டான். இச்சிறுவன் சிறந்த அறிவாளியாகவும், பல நாட்டு மன்னர்களைப் பயங்கொள்ளச்செய்யும் பலம்பொருந்தியவனாகவுமிருந்தான். இவனது தந்தைக்குப் பின்னர் உரிமைப்படிப் பெத்தாப்பிநாட்டு மன்னனாகி வாழ்ந்திருந்தான்.

இவனுக்கு வெட்டுவன், வேடன், காவலவன், பூவலவன், மாவலவன், யென ஐந்து மக்களிருந்தனர். இவர்கள் மிக்கத் திறமைவாய்ந்தவர்கள். அழகில்லாத ஒருவனுக்குச் சௌந்தர ராஜனென்றும், சிவந்த நிறமுள்ள ஒருவனுக்குக் கறுப்பன்யென வும் பெயரிடுவதுபோல, அக்காலத்தில் குருகுலத்தினரிடம் உண் மைக்கு மாருகப் பெயரிடும் வழக்கம் இருந்ததேயில்லை. வலிமை மிகுந்திருந்த கண்ணப்பனுக்குத் திண்ணனென்றும், காட்டிற்பிறந் ததின் காரணமாக ஒருவனுக்குக் காடன் என்றும், வில்லுக்கு நாணேற்றுவதில் மிக்க வலிமைபெற்றிருந்த ஒருவனுக்கு நாணன் என்றும், பெயரிட்டிருந்தனர். அதுபோன்று, போர்களத்தில் எதிரிகளை வெட்டுவனேயொழிய வெட்டுப்படாத ஒரு மகனுக்கு வெட்டுவன் என்றும், வேட்டையாடுதில் வல்லவனுன மற்ருெரு மகனுக்கு வேடன் என்றும், எதிரிகளுக்குப்பயந்து எவன் வந்து தன்னை அடைக்கலம் புகுந்தாலும் அவனைக் காப்பாற்றும் சிறந்த குணத்தையுடைய மற்ருெரு மகனுக்குக் காவலவன் யென்றும், அழகிற்சிறந்திருந்த ஒரு மகனுக்குப் பூவலவன் யென்றும் யானை யேற்றம். குதிரை யேற்றம், போன்ற வித்தைகளில் வல்ல வனுயிருந்த மற்ருெரு மகனுக்கு மாவலவன் என்றும், பெத்தாப்பி நாட்டுப் பேர்மிகு மன்னன் பெயரிட்டிருந்தான். முத்தணி ராஜன் காலகதியடைந்தபின்னர் மூத்தகுமாரன் வெட்டுவனென்பான் பட்டத்திற்கு வந்தான். இவரின் பரம்பரையாரையும், இவரது சகோதரர்கள் பரம்பரையாரையும் இக்காலத்தில் வெட்டுவர், வேட் டுவர், யென அழைக்கின்ருர்கள்.

வெட்டுவராஜனை, திருக்கச்சையன், கச்சேந்ர துரை, கச்சைய மன்னன், எனப்பல சிறப்புப்பெயரிட்டுக் கூறுதலுமுண்டு. இவ னின் ஆட்சித்திறமை மிகமிகக் கீர்த்திவாய்ந்தது. அதிகாலையி லெழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு தேவி பூஜைபுரிந்து, குருவின் உபதேசங்களைப்பெற்ற பின்னர்தான் மற்ற காரியங் களைக்கவனிப்பது. இவன்காலத்தில் இவனுக்கு விரோதிகளே யிருந்ததில்லை. மற்ற நாட்டினருக்கு உதவிபுரிதலன்றி, கைப்பற்ற வேண்டுமென்ற எண்ணம் இவனுக்கு உதிக்கவுமில்லை. தெருக்கள் தோறும் அன்னசத்திரங்கள் வைத்து உணவின்றி ஒரு ஜந்துவும் தன்னூட்டில் உறங்கக்கூடாதெனக் கடுங்கட்டளையிட்டவன்.

எனவே, இவனின் உயரிய மாண்பைப் போற்றுதார் ஒரு சிலரா வது உண்டென்று கூற உற்ற ஆதாரமில்லை.

## மூவேந்தர்கள் சிறைப்படல்.

இக்காலத்தில் பெருமலை நாட்டைப் பரிபாலித்துவந்த மிருக ராஜன், பரசன், உத்தண்டன், அச்சுதன், சளப்பாலன் என்ற ஐவர்கள் தென்னாட்டுக்குட் புகுந்து குடிகளின் செல்வத்தையெல் லாம் கொள்ளைகொண்டதன்றித் துன்புறுத்தியும் வந்தார்கள் சஞ் சலங்கொண்ட குடிகள், அன்று அரசர்களாயிருந்த சச்சேந்திரவர குண துங்கபாண்டிய மன்னனிடத்திலும், சேரவேந்தனிடத்தி லும், சோழ ராஜனிடத்திலும், சென்று தங்களுக்கேற்பட்டுள்ள இன்னலைக்கூறி முறையிட்டனர். இது கேட்ட மூவேந்தர்களும் சினங்கொண்டு தங்களின் படைகளை யேவினர். எதிரிகளான ஐவர்களும், அவர்களின் படைகளும், மிக்க பலம் பொருந்தியிருந்த தால், மூவேந்தர்களின் படைகளை வெட்டி வீழ்த்தி வஞ்சகமாக சச்சேந்திரவரகுண துங்க பாண்டியனையும், மற்ற சேர, சோழ மன் னர்களையும் பிடித்துக் கடற்கோட்டையில் விலங்கிட்டுச் சிறைப்ப டுத்தினார்கள். எனினும், தென்னாட்டுக் குடிகளுக்குத் துன்பந் தீர்ந் தபாடில்லை. என்செய்வார்கள் பாவம். தாயைப்பிரிந்த சேய் போல கோவேந்தனைப் பிரிந்த குடிகள் செய்வதின்னதென்று தோன்றுமல் வறுமையின் காரணமாக மடிந்தனர்சிலபேர். நாட்டை யிழந்து பிறநாட்டை நாடினர் சிலபேர். வாடினர் சிலபேர். ஓடி னர் சிலபேர். இவ்வாறுகப் பனிரெண்டாண்டுகள் கழிந்தன.

சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் புதல்வர்கள் மூவரும் ஒன்றுகூடித் தங்கள் தந்தையர்களைச் சிறைமீட்கத்தக்க வுபா யத்தை யோசித்தனர். ஒன்றுந் தோனுதவர்களாய் "சிறை மீட் கும் உபாயங்காணுமல் நாட்டிற்குத் திரும்புவதில்லை" யென்ற வுறுதி பூண்டு வடதிசை நோக்கி நடந்து, ஒரு காட்டையணுகினர். ஆங்கு ஒரு முனிவர் எதிர்ப்பட்டார். இளவேந்தர்கள் மூவரும் முனி வரைப் பணிந்து, தாங்கள் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் புதல்வர்களென்றும், சிறைப்பட்டுள்ள தங்கள் தந்தையர்களை மீட் கும் முயற்சிபூண்டு இவ்வழிச் செல்வதாகவும் கூறினர். செவிக்

கொண்ட முனிவர் மனமிறங்கி இளைஞர்கள் மூவரையுந்தேற்றி, சிறை மீட்கத் தகுந்த உபாயந்தனக்குத்தெரியுமென மொழிந்தார்.

"கூறுக" வென்று சிறுவர்கள் மூவரும் செப்பி முனிவரை நோக்கி முன்னின்றனர். "இளைஞர்களே! உங்கள் தந்தையர்களைச் சிறைப்படுத்தியுள்ள மிருகாராஜன், உத்தண்டன், அச்சுதன், பாசன், களப்பாலன் ஆகியவர்கள் மிக்க வலிமைபடைத்தவர்கள். இதுசமயம் உங்களிடத்திற் படைகளுமில்லை, போதிய பக்கபலமுமில்லை. ஆதலால் எதிரிகளை எதிர்ப்பதென்பது உங்களால் முடியாத காரியம். பெத்தாப்பி நாட்டை, உடுப்பூர் என்ற தலைமைப் பட்டணத்திலிருந்து பரிபாலித்துவரும் வெட்டுவமன்னன் (கிருக்கச்சேந்திர மகாராஜன்) மிக்கவலிமையுள்ளவன். இரத, கஜ, துரக, பதாதிகளென்ற நான்கு வகைப்படைகளும் அவனிடமுண்டு. உதவிவேண்டுவோருக்கு ஓடோடியுஞ்சென்று இன்னலைத்தவிர்த்து நன்மைபுரிவதே அவனது மனப்பான்மை. இதுவின்றி பூவலவன், காவலவன், மாவலவன், வேடன் யென்ற நான்கு சகோதரர்களுமுண்டு. அவர்களின் வீரத்தன்மை அளவிடக்கூடாதது. சிறுவர்களான நீங்கள் வெட்டுவமன்னனிடம் சென்று முறையிடுங்கள். உங்களெண்ணம் வெற்றியுறும்" யெனச் சொல்லி அவ்விடம் விட்டகன்றார்.

இளைஞர்கள் மூவரும் மனமகிழ்ச்சியுடன் அன்றிரவுக்குள்ளாக உடுப்பூரை நாடினர். சத்திரத்திலமுதருந்தி ஆங்கே இரவைக் கழித்து, மறுநாட்காலை வெட்டுவராஜனின் கொலுமண்டபத்திற்குள் சேவகர்களின் உத்திரவு பெற்றுச் சென்றனர். வெட்டுவமன்னன் தனது சகோதரர்கள், அமைச்சர்கள் புடைசூழ, மண்டபத்தை யடைந்து சிங்காதனத்திலமர்ந்தார். மண்டபத்தை நாடிவந்திருக்கும் மைந்தர்களை மன்னன் அமரச்செய்து "தாங்களெவ்ஆர்? எக்காரணம் பற்றி இங்கு வந்தீர்கள்? எம்மாலாகும் பணிகளேதேனுமுண்டோ?" யென வினவினர். மைந்தர்கள் முகமலர்ச்சியோடெழுந்து "அரச பெரும! நாங்கள் தென்னாட்டைப் பரிபாலித்த சேர, சோழ, பாண்டிய வேந்தர்களின் புதல்வர்கள். சென்ற பனிரெண்டாண்டுகட்குமுன்னர் எங்களின் தந்தையர்களைப் பெருமலை நாட்டு மன்னர்களான மிருகாராஜன், களப்பா

லன், அச்சுதன், பாசன், உத்தண்டன் ஆகியவர்கள் சிறைபிடித்துக் கடற்கோட்டையில் வைத்திருக்கிறார்கள். தந்தையர்களைப்பறி கொடுத்த நாங்கள் தகுந்த பலமின்றிப்பகைவர்களை இதுகாறும் எதிர்க்கவில்லை. போதிய உதவிதாவல்ல தங்கள் சமூகத்தை நாடினோம்" எனக் கண்ணீருகுத்துக் கலங்கி நின்றனர். கண்ட கச்சேந்திர மன்னன் (வெட்டுவன்) "ஆசிளங்குமாரர்காள்! அஞ்சுவதும், ஆகாத்தொழில் புரிவதும், கெஞ்சுவதும், கீர்த்தி யிழப்பதும், மக்களுக்கன்றி மன்னர்களுக்குங்கூட இழிவியற்றத்தக்கதன்றோ? அங்ஙனமாகச் சிறந்த யுவவேந்தர்களாகிய நீங்கள் கலங்காதீர்கள். "பேராண்மை யென்பதறுகண் ஒன்றுற்றக்கால் ஊராண்மை மற்றதன் எஃகு" யென்ற தெய்வப்புலவர் திருவாக்கின்படி ஒன்றுற்றபோது அதற்கஞ்சாமையே பெரிய ஆண்மையென்றும், அதற்குரியதை உலகியலறிந்து செய்வதுதான் அதற்குப் படைக்கலமென்றும், நாம் கருதவேண்டும். ஆகவே, இன்னல் விளைந்த இச்சமயம் அஞ்சாதீர்கள். நம்மாலியன்ற உதவியைச் செய்கின்றோம் பொறுமின்! பொறுமின்!!" யெனச் சிறுமன்னர்களைத் தேற்றினன்.

மறுநாட்காலை வெட்டுவமன்னனும், அவனது சகோதரர்களும், அன்னை காளிதேவியின் மலரடியை மனத்தேத்தி, குருவின் பொற்பதம் பணிந்து செய்வனவற்றையும், செய்யவேண்டுவனவற்றையும் புகன்று, ஆசிபெற்று தமது படைகளை மிருகராஜன் முதலியவர்களுடன் போருக்குத்தயாராகும்படிச் சேனாபதிக்கு உத்திரவிட்டான். அரசன் கட்டளைப்படி சகல படைகளுந் தங்கள் தங்கள் ஒலிச்சின்னங்களை முழக்கினர். பேரிகை முழக்கம் பேரிடியைத்துறத்தின. டமாரங்கள் அதிர்ந்தன. எக்காளவொலி எட்டுத்திக்குகளிலும் முட்டிப்புகுந்தது. இத்தகைய ஆர்பாட்டத்துடன் படைகள் அரண்மனை வாயலிற் சூழ்ந்து அணிவகுத்து, அரசன் வரவை அன்புடன் எதிர்நோக்கியாங்கு நின்றனர். போர்க்கோலம்பூண்டு, வாகைமாலை தோள்புரள, காவலவன், பூவலவன், மாவலவன், வேடன் யெனுஞ் சகோதரர்கள் புடைசூழ, கச்சேந்திரமன்னன் காட்சிமிகுந்த அரண்மனைவாயிலைக்கடந்தனன். வெண்சங்குநாதம் எழுந்தது. வெடியின்துடி காளத்திமலைச்சாரலில் தவழ்ந்து மழுங்கிற்று. ஓங்கும் புலிக்கொடிகள் உயர்த்தப்பெற

ரன். மேருவையொத்த தேருகளில், பஞ்சகல்யாணிப்புரவிகள் பிணைக்கப்பட்டதும், மன்னர்கள் ஐவரும் ஆரோகணித்தனர். ஜே! ஜே!! வென்ற சீரிய கோஷத்துடன் வடதிசை நோக்கி மாண்புறச் சென்றனர். கடுகி நடந்து, சில நாட்களில் கங்கை நதியைக்கடந்து கரையேறினர்.

ஆங்கு சிரமந்தீர்த்து, மீண்டுஞ் செல்வதெனச் சௌகரியமான விடத்தில் தங்கினர். உணவுகள் தயாரித்து வுண்டுகளித்தனர். இது சமயம், மிருகராஜனின் புதல்வர்கள் ஆங்குற்று கச்சேந்திர மன்னனையணுகி "நீங்கள் வந்த காரணத்தை யறிந்தோம், நீங்கள் கனவிலும் செய்து முடிக்கொணாத வொன்றைச் செய்து முடிப்பதாக மனப்பால் குடித்து, இங்குற்ற உங்கள் புல்லறிவை யென்னெனப் புகல்வோம். மரியாதையாகத் திரும்பி இருப்பிடம் போய்ச்சேருங்கள்" என மொழிந்தனர். செவிக்கொண்ட திருக் கச்சேந்திர மகாராஜன் புன்னகை பூத்து "இளைஞர்காள்" பொறுமின்! அவசரமென்பது உம்போன்ற அரசர்களுக்கு விரோதி. எங்கள் திறமையையும், உங்கள் திறமையையும், உற்றுநோக்கிப் பக்ஷ்பாதமின்றி, நடுவுநிலைமைகாட்டித் தீர்மானிக்க, அறைகூவி அழைக்கும் சமர்க்களம் ஒன்றிருக்க ஏன் வீண்வார்த்தை பேசிக் கொள்ளவேண்டும். ஆங்குச்சென்று அதனைத் தீர்மானிப்போம். பொறுமின்! பொறுமின்!! ஆதலால் நீங்கள் சென்று உங்கள் தந்தையாரிடம் நாளைக்காலைப்போருக்கு ஆயத்தமாயிருக்கச் சொல்லுங்கள்" யெனப் பொன்முடிப்புவனேந்திர வெட்டுவ மன்னன் புகன்றான். நன்றெனச்சென்ற சிறுவர்கள் பெருமலையை நாடி தங்கள் தந்தையிடம் நடந்ததை நவின்றனர். செவிக்கொண்ட மிருகராஜனின் கண்கள் சிவந்தன. சிவந்தமுகம் சீரிய சினத்தைத் தெரிவித்தது. மீசை படபடவெனத் துடித்தது. வலிமை மிக்க சேர, சோழ, பாண்டிய மன்னர்களுங்கூட எனது சிறைக்குள், விலங்குடன் கிடக்கச்செய்த யென் வீரம், கேவலம் வெட்டுவன் படைக்காக அஞ்சப்போவதில்லை. அவனது படைகளும், அவனும், எனது கைவாளுக்கு ஒரு நாழிகை யிறைக்குக்கூட ஆனவர்களல்ல. யாவற்றையும் நாளைக்காலை சதுரமலைச்சாரலிற் பார்ப்போம். மைந்தர்களே! நமது படையைத் தயாரியுங்கள்" எனக் கட்டளையிட்டான்.

மறுநாட் காலை படைகளுடன் மிருகாராஜேந்திரன் குருகுல வீரர்களை யெதிர்க்கச் சதுரமலைச்சாரலை யணுகிப் போர்முரசை யதிரச்செய்தான். குருகுலப்படைகளுந் தயாராயிற்று. புலிக் கொடிகள் உயர்த்தப்பெற்றன. வேல், வில், அம்பு, வாள், முதலிய படைக்கலங்களை எடுத்தனர். போர்புரியுங்காலத்திற் செய்ய வேண்டிய தந்திரங்களையும், மற்ற பாஷைகளையும், ஒருவரோடொருவர் கலந்து பேசிக்கொண்டனர். மன்னர்கள் ஐவரும் முன் செல்ல, மற்ற படைகள் பின் தொடர்ந்து சதுரமலைச்சாரலைச் சார்ந்தனர்.

பூவலவன் படைகளும், மிருகராஜன் படைகளும், அதிகாலையிற் போரை ஆரம்பித்தனர். இருதரப்பினரும் மாலைவரை சமர் புரிந்த காட்சி பாரதப்போரை ஞாபகப்படுத்திற்று. அம்புகள் மேகத்தினும் மிக்க வேகத்தையுற்று விரவிப்பறந்தன. ஆனல், இருமன்னர்களும் சலித்தார்களில்லை. இந்நிலையில் பூவலவன் அம்புகள் மிருகாராஜேந்திரனின் உடலிற் புகுந்து, பெரிய வழிகளைச்செய்து உறுத்த ஆரம்பித்தன. பூவலவன் படையினர் கொண்டுள்ள வேல்கள் மிருகாராஜன் படையினர் உடல்களுக்குட்சென்றுசென்று திரும்பின. இனி வெற்றியடைவதில்லை என்ற தீர்மானங்கொண்டு மிருகமன்னனின் படைகள் புறங்காட்டியோட ஆரம்பித்தன. இச் சமயம் படைப்பலமிழந்த மிருகாராஜேந்திரனின் தேர்மீது பூவலவன் காணப்பட்டான். பூவலவன் கரங்கள் மிருகாராஜனின் முடியையும், கொடியையும் பற்றின. என் செய்வான் பாவம்! மிருகமன்னன் ஒன்றுந்தோன்றாதவனாய்ப் புறங்காட்டிப் பெருமலையை நோக்கி விரைவாக ஓடினன். புறங்காட்டியோடும் போர்வீரனை வெட்டி வீழ்த்துவதோ, அம்புகொண்டெய்வதோ, சுத்தவீரனின் இலக்ஷணமல்லவென்று நினைந்த பூவலவன், பின்னோடிச்சென்று மிருகமன்னனைப் பிடித்தான். துடிதுடித்த மிருகனின் வீரம் பலகாதம் தாண்டிப்பறந்தது. சிறிது நேரத்தில் வெட்டுவாராஜேந்திரன் முன்னிலைக்குக் கொண்டுவரப்பட்டான். கண்ணுற்ற சகோதரன் கச்சையமன்னன் மற்றுள்ள உத்கண்டன், களப்பாலன், அச்சுதன், பாசன், ஆகியவர்களிருக்கும் இடத்தைக் கண்டுவரவும், சமாதானமொன்று சொல்லிவரவும், ஒரு தூதனைக் கூட அனுப்பி மிரு

களை வழிகாட்டும்படி ஆஞ்ஞாபித்தான். கடுகிநடந்து ஆறு நாழிகைகளிற் பெருமலை உத்தண்டன் சமுகத்தை யணுகினர்.

மிருகராஜனின் கோலம் அச்சுதனையும், மற்றுள்ள மூவர்களையும் உருகச்செய்தது. "அரசே! தங்களுக்கு இக்கோலம் எற்பட்டதேனோ?" வென்று வினவினர். மிருகராஜன் கண்ணீர்ததும்ப "என் செய்வேன், இதோ என் உடலைப்பாருங்கள்," என்று அம்பு பாய்ந்த வடுக்களையும், தனக்கேற்பட்டுள்ள அபஜெயத்தையும் கூறி அழுதான். கண்ட நால்வர்களுங் கடுங்கோபங்கொண்டு தூதனை நோக்கி யாது விசேடம், எதற்காக வந்தீர், உடன் தெரிவிக்கவும், போருக்கெழவேண்டும்," என்றூர்கள், பெருமலைமன்னரே! எங்கள் மன்னர், சேர, சோழ, பாண்டிய வேந்தர்களைச் சிறை மீட்பதற்காகவே போர்புரிய வந்தார்கள். எங்களுடன் போர்புரியத் தங்களுக்குப் போதிய வல்லமை யில்லை யென்பதற்கு மிருகராஜனின் தோல்வியொன்றே போதிய சான்றாகும். இவ்வபஜெயம் வரப்போகும் தோல்வியின் உற்பாதம். ஆகலால் மூவேந்தர்களையும் சிறை நீக்கிவிட்டு இந்நாட்டை யென்றென்றும் ஆண்டிருங்கள்" என மொழிந்தான், இதைக்கேட்ட பெருமலை மன்னர்கள் ஆர்ப்பரித்தெழுந்து "குருகுலத்தூதனே! உங்கள் படைகளையும், உங்கள் மன்னனையும் சமர்க்களத்திற்கு வரச்செய், மற்ற செய்திகளை ஆங்கிருந்து பேசுவோம்," யென மொழிந்தனர். தூதன் திரும்பிவந்து வெட்டுவமன்னர்களிடம் நிகழ்ந்தவற்றைச் சொல்லி நேரும் போருக்கு ஆயத்தம் செய்தான்.

மறுநாட் காலை சதுரமலை யோரத்தில் பாசன், களப்பாலன், உத்தண்டன், அச்சுதன் படைகளும், வெட்டுவப்படைகளும் போர்புரிந்தன. உத்தண்டனும் மாவலவனும் போர் பொருதினர். சரங்கள் பறந்தன, மாவலவன் உத்தண்டனுடலை அம்புகளால் ஊடுருவச்செய்தான். சகிக்கவியலாத உத்தண்டன் புறங்காட்டி ஓடுவதுகண்டு, மாவலவன் பின் தொடர்ந்து சென்று உத்தண்டனை ஒரே வெட்டாய் வெட்டி வீழ்த்தினான். கண்ணுற்ற களப்பாலன் சீறியெழுந்து மாவலவனை மற்போர்புரிய அறைகூவி யழைத்தான். இருவரும் புரியும் மற்போரைக் கண்ட காவலவன் ஓடிவர, களப்பாலன் மாவலவனை தூக்கி வீசியெறிந்தான். உடனே காவலவன் மற்போர்புரிந்து களப்பாலனின் கழுத்தொடிய முறித்துக்கொன்

ளுன். இச்சமயம் பாசன் வீரன் போர்புரிய வந்தனர். கண்ட குருகுலவேந்தர்கள் ஐவரும் சரியென்று பாணங்களை விடுத்தனர். பாசனின் உடல் அம்புகளால் துளைக்கப்பட்டது. இனி "வெற்றி பெறுவதில்லை" யென நினைத்த பாசன் பின்னால் திரும்பி நோக்க, தனது படைகள் புறங்காட்டி யோடுவதைக்கண்டு கலங்கினன். "வெந்தபுண்ணில் வேல்பாய்ந்ததுபோல" அபஜெயத்தின்மேல் அபஜெயம் ஏற்படுவதால் இனி நமக்கு ஜெயமில்லை; ஆதலால் சிறை கிடக்கும் மூவேந்தர்களையும் கொண்டுவந்து குருகுல மன்னர்கள் முன் வெட்டி மடிக்கவேண்டுமெனப் போர்புரிவதை விடுத்துப் புறங்காட்டிக் கடற்கோட்டைவாயலை நோக்கிக் கடுகிநடந்தான். பாசன் ஓடுவதைக்கண்ட குருகுல மன்னர்கள் விட்டார்களில்லை. பின் தொடர்ந்து சென்று கடற்கோட்டைவாயலிற் பாசனைக்கைப் பற்றினர். பின்னர் சிறையிலிருந்த சேர, சோழ, பாண்டிய மன்னர்களை மீட்டு, அவர்களுக்கிடப்பட்டிருந்த விலங்குகளை விலக்கி யெடுத்துப் பாசனுக்கிட்டனர். மூவேந்தர்களையும் அழைத்துக் கொண்டு, வெற்றிமுரசு அதிர, வெண்சங்கமுத, தாரையொலிக்க, டமாரங்கள் முழங்க, புலிக்கொடிகள் பறக்க, வெட்டுவப்படையி னர் ஜே! ஜே!! யென்ற வீரமுழக்கத்துடன் தென்னாடு நோக்கித் திரும்பினர்.

சில நாட்களில் உடுப்பூருக்கு வந்து சேர்ந்தனர். வேந்தர்கள் மூவரும் சில நாட்களை உடுப்பூரிற் கழித்துத் தங்கள் ஊருக்குப் போவதாகவும், தங்களுடன் வெட்டுவமன்னர்களும் வரவேண்டு மென வேண்டினர். ஏற்றுக்கொண்ட குருகுல வேந்தர்கள் நன் னுளொன்றிற் புறப்பட்டார்கள். வினையின் காரணமாக விளைந்த பனிரெண்டாண்டு சிறையை மீட்டுவைத்த குருகுலத்தாருக்கு தங் களின் நன்றிகாரணமாக கொங்குநாட்டைப் பரிசளித்துப் பட்ட மியற்றவேண்டுமென மூவேந்தர்களுந் தீர்மானித்துத் தங்களபிப் பிராயத்தை வெட்டுவமன்னன்பால் சமர்ப்பித்தனர். வெட்டுவ மன்னன் அவர்களின் எண்ணத்தை ஒருவாறு ஏற்றுக்கொள்ள, குறித்த நாளிற் கருவூரில் ஒன்று கூடினர்.

## மகுடாபிஷேகம்.

கலியுகம் 4175 ஆங்கிரஸ-ஹு ஆடி-மீ" எட்டாம்தேதி சுக்கிர வாரம் தசமிதிதி, அவிட்ட நக்ஷத்திரமும் சேர்ந்த சுபநாளில் குரு

குல மன்னர்கள் ஐவருக்கும் 'ராயர்'' என்ற பட்டம் வழங்கி கொங்கு இருபத்துநாலு நாடுகளையும் பாரம்பரியமாய் "ஆண்டு கொள்க"வெனச் செப்பேடு பட்டயமு மெழுதிக் கருவூர் சுவாமி யின் முன்னதாக வெட்டுவராஜேந்திரனுக்கு முடிசூட்டினர். மற் றுள்ள நால்வருக்கும் இளவரசுப்பட்டம் ஈந்தனர். அன்றுமுதற் கொங்குமண்டலத்தை இராஜநீதி சிறிதும் வழுவாது அரசாண்டு, குடிகளிடம் கொஞ்சங் கடமைபெற்று, எதிரிகளின் பயமின்றி இன் புற்றிருந்தனர். இப்பட்டாபிஷேக நிகழ்ச்சியைக் காஞ்சிபுரம் செப் பேடு கூறுகிறது.

## கொங்குநாடும், குருகுல மன்னரும்.

பூந்துறைநாடு, தென்கரைநாடு, காங்கேயநாடு, பொன்கலூர் நாடு, ஆறைநாடு, வாரக்கநாடு, பூவாணியநாடு, அரையநாடு, ஒடுவங்க நாடு, வடகரைநாடு, கிழக்குநாடு, நல்லுருக்கநாடு, வாழவந்திநாடு, அண்டநாடு, வெங்காலநாடு, காவடிக்கநாடு, ஆனைமலைநாடு, இராசிபுர நாடு, காஞ்சிக்கோயிநாடு, குறிப்புநாடு, திருவாவினன்குடிநாடு, மணநாடு, தலையநாடு, தட்டையநாடு ஆகிய 24 நாடுகளைக்கொண்ட கொங்குமண்டலத்தைக் குருகுல மன்னர்கள் குறிப்பு நாட்டெல்லை யிலிருந்து செங்கோற் செலுத்திவந்தார்கள். இவர்கள் வசித்து வந்த கோட்டையின் சின்னங்கள் திங்களூரில் (குறிப்புநாடு) இன் றும் காணப்படுகின்றன. மற்றும் வெட்டுவன் சகோதரர்கள் ஆங் காங்கு கொங்குநாடெங்கும் பரவி வாழ்ந்திருக்கிறார்கள். இதற் குப் பல சான்றுகளும், ஆதாரங்களும், கல்வெட்டுகளும், சிலாசா சனங்களும் உள.

## செய்யான் பல்லவராயன்.

தொல்லுல கத்தினிற் றுட்டரை வெட்டித் துணித்ததனாற்
சொல்லிய போசள வீர புசபலன் றுகளுறுசீர்ப்
பல்லவ ராய னெனப்பட்ட மீயப் படைசெலுத்த
வல்லவன் வேட்டுவச் செய்யானும் வாழ் கொங்கு மண்டலமே

(கொங்குமண்டல சதகம்)

## வரலாறு.

மேல்கரைப் பூந்துறை நாட்டைச் சார்ந்த அரச்சலூரிலிருந்து அரசுரிமை நடாத்திய வெட்டுவகுலத்துச் செய்யான் பல்லவராயன் என்பவர் ஒய்சல விரவல்லாள வேந்தனுக்கு எதிரிகளால் இன்னலேற்பட்டகாலத்து, படைகளுடன் சென்று எதிரிகளைத் தோர்க்கடித்து, ஜெயம்பெற்றுவந்தான். இவனது யுத்த தந்திரத்தையும், உதவுமெண்ணத்தையும் மெச்சி "பல்லவராயன்" என்ற பட்டப் பெயரீந்துகொண்டாடினர். இவனது சாசனம் அறச்சலூர் புறத்திடங்கொண்ட நாயினார் ஆலயத்தின் தென்புறச் சுவற்றில் வரையப்பட்டுள்ளது. (இதுவின்றி வெட்டுவர்களைச்சார்ந்த சில சாசனங்கள் ஆங்குள்ள பிரபலஸ்தர்களால் மண்ணிற்புதைத்து மறைத்துவிடப்பட்டதாகவும், இன்னும் சில இடங்களில் சாசனக்கற்களை உடைத்தெறிந்திருப்பதாகவும் கேள்வி. இதற்குக்காரணம் வெட்டுவகுலத்தினர்பால் கொண்டுள்ள விரோத மனப்பான்மையே) இவன்மீது சில நூற்கள் கூறப்பட்டுள்ளன, ஆகவே! வெட்டுவ மன்னர்கள் பூந்துறை நாட்டையும் அரசாண்டுள்ளனரென்பதற்கு இதுவுமோர் அத்தாட்சியாகும்.

## அல்லாளன் இளையான்.

வடமுக நின்று வருகா விரியின் வனத்தைவென் றுந்
திடமுறு கொங்கினும் பாசன மாகச் செலப்பிரித்த
அடல்கொ ளல்லாள னிளையான் பெருக்க மமைந்தவனர்
வடகரை யாற்றூர் திகழ்வது வுங்கொங்க மண்டலமே.

(கொங்குமண்டல சதகம்)

## வரலாறு.

கொங்கு இருபத்து நான்கு நாட்டினுள்ளே கீழ்கரை அரைய நாட்டில் வடகரை ஆற்றூரில் வெட்டுவரில் இம்முடித்திருமலை அல்லாள இளையாநாயக்கன் யெனத் தக்கோனொருவனிருந்தான். அவன் திருச்செங்கோடு ஸ்ரீ நாகேஸ்வரர் அர்த்தமண்டபம், மகாமண்டபம், முதலிய திருப்பணிகள் செய்தான். மைசூர் பெருங்

கலகக்காரனும், கொள்ளைக்காரனுமான நஞ்சைசயவுடையார், ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் ஆலயத்திற் கொள்ளையடித்துக்கொண்டு போனார்; என்றாலும், ஆறை இளையாநாயக்கன் பலத்தசேனையுடன் சென்று அவர்களை வழிமறித்துக் கொள்ளைப்பொருள்களைப் பிடுங்கிக்கொண்டு வந்து சேர்த்தான். அழிந்தவற்றிற்குத் தன்னுடைய தாகப் பல உதவினான். சாலிவாகன சகாப்தம் 1565-ஆம் தாரண-ஆம் ஐப்பசி-மீ 25-உ (கி. பி. 1643) நாகேசுரர் கோவிலில் சம்புரோக்ஷணஞ் செய்வித்திருக்கிறான். காவிரியின் வடபுறம் அணையிலிருந்து வாய்க்கால் பிரித்துப் பாசனவசதி செய்வித்திருக்கிறான். இன்றும் இவ்வாய்க்காலை ராஜவாய்க்காலென வழங்கிவருகிறார்கள். இவனது முன்னோன் இம்முடிப்பட்டம் தியாகப்பெருமாள் நாயக்கனென்று காஞ்சிபுரம் செப்பேட்டிலெழுதப்பட்டுள்ளது. ஆகவே, வெட்டுவர்களுக்கு நாயக்கர் யென்ற பட்டப்பெயரும், ஆறைநாட்டு ஆட்சியும் இருந்ததென்பதை இதனாலறியலாம்.

## கோபண மன்றாடி.

தென்பாண்டி நாட்டினிற் சிங்களர் தீமை செயச்செழியன்
முன்போ யகற்ற வலியற்ற காலத்தின் மொய்ம்பொடவர்
பின்போடத் தானை கொடுமோட்டு வீரன் பெருங்களந்தை
மன்பூ வலனெனுங் கோபண னுங்கொங்கு மண்டலமே.

(கொங்குமண்டல சதகம்)

### வரலாறு.

பாண்டிய மண்டலத்தின் ஆளுகையைப்பற்றிப் பராக்கிரம பாண்டியனுக்குங் குலசேகர பாண்டியனுக்குஞ் சண்டை நேர்ந்தது. மனைவிமக்களுடன் பராக்கிரமபாண்டியனைக் குலசேகரன் நாசஞ்செய்யவும், இதனைக்கேள்வியுற்ற சிங்களத்தரசனான பராக்கிரம பாகு-தன் தண்டநாயகனான இலங்காபுரி யென்பானைப் பலத்த சைனியத்துடனனுப்பினான். அவன் இராமேசுரத்தையும், சுற்றுள்ள சில நாடுகளையும் பிடித்து, பராக்கிரமபுரம் யென்ற தலைமைப் பட்டணமொன்றமைத்து அரசுபுரியலானான். இவனை எதிர்த்த

பாண்டியமன்னனையும் கொன்ருன். அச்சமயம் கொங்குநாட்டைப் பரிபாலித்து வந்த குருகுல மன்னர்களிலொருவனுன கோபணன் (பூவலவகுலத்தான்) தனது படைகளுடன் சென்று சிங்களப்படைகளை திருக்கானப்பேர், தொண்டி, பாசி, பொன்னமராவதி, மணமேற்குடி, மஞ்சக்குடி, என்னும் இடங்களிலெதிர்த்துச் சிங்களப்படைகளை பாண்டிய நாட்டைவிட்டு ஓடும்படிச் செய்தான். 1898 சென்னை ஆர்க்கிலாஜிகல் வருஷாந்திர ரிபோர்ட்டிலும். காஞ்சிபுரத்திற்கடுத்த ஆரம்பாக்கத்துக் கோயிற் சாசனத்திலும் இப்படையெடுப்பு எழுதப்பட்டுள்ளது. இம்மரபினர் கோவை ஜில்லா, புரவிபாளையம் ஜமீன்தாராக இன்றும் இருந்து வருகின்றனர். இதிலிருந்து காவடிக்கநாட்டிலிருந்தும் குருகுலமன்னர்கள் அரசுபுரிந்திருக்கிருர்களென்று காணக்கிடக்கிறது.

## குறிப்புநாடு.

### குறிப்புநாட்டுச் செப்பேட்டின் நகல்.

சுபமஸ்து ஸ்வஸ்தி ஸ்ரீ அம்மன் மகாமண்டலேஸ்வரனரிய தனவிபாடன பாஷைக்கரிதப்பு வாரதகண்டன் யெம்மண்டலம் திறை கொண்டருளிய ராஜாதி ராஜன் ராஜபரமேஸ்வரன் ராஜமார்த்தாண்டன் ராஜகெம்பீரன் ராஜபுங்கரன் ராசவச்சிரதன் சேரன், சோளன் பாண்டியன் மூவராசாக்களும் ஆரிலொரு கடமைகொண்டு அசையாமணிகட்டி ராஜியபரிபாலனம் பண்ணுகின்ற சாலிவாகன சகாத்தம் 1815-ஷு இதன்மேல் செல்லாநின்ற ஸ்ரீமுக-ஷு ஆவணி-மீ 20-தேதியும், சுக்கிரவாரமும் தசமியும் அமுர்தகெளிகையும் கூடின சுபதினத்தில் ஆளுத மகாசுவாமி மூவராசாக்களும் செங்கோலதிகாரம் செலுத்துகின்ற நாளையில் வடதேசத்திலிருந்து குருகுலத்து வேட்டுவ ராஜாக்கள் எங்களுக்கு உதவியாகத் தருவிச்சு இருந்ததிலுலே யிவர்களில் நரசிங்கராயர், சந்தணராயர், பல்லவராயர், பூவலவராயர் இந்த நாலுபேருக்கும் குறிப்புநாடு 32 கிராமத்துக்கும் சதிர்மத்தியில் கைத்தமலை, அருளுமலை, வட்டமலை, திட்டமலை, பவளமலை, இந்த 5 மலையுள்ள சதுர்மத்தியில் வடக்கு காவல காஞ்சிநாட்டுக்கு சேர்ந்த பாரியூர் எல்லைக்குந் தெற்கு முடச்சியூர் எல்லை பவளமலைக்கும் தெற்கு பூந்துரைநாட்டில் பெருந்துரை எல்லை எழுத்துப்பாறை கருங்காட்டுக்கும் மேற்கு காங்கயநாட்டெல்லைக்

கும் வடக்கு ஆருநாட்டில் நம்பியூர் எல்லைக்கும் கிழக்கு இந்த நால் பாங்கிலேயும் அங்கமச்ச அடையாளம் சிலாசாசனங்கள் உவிக்குளியும் செப்புப்பட்டயமும் எழுதிக்கொடுத்து நாலுபேருக்கும் குறிப்புநாடு முப்பத்திரண்டு கிராமமும் சர்வ அதிகாரம் பண்ணிக்கொண்டு துஸ்டநிர்க்கிரக சிஸ்டபரிபாலனம் செய்துகொண்டு தரும நீதியாய் புத்திர பவுத்திர பாரம் பரிகதையாய் சுகமே இருக்கும் படிக்கு இன்னால்வருக்கும் பட்டாபிஷேகம் பண்ணி நாட்டாரென்றும், பட்டக்காரரென்றும், பாளையக்காரரென்றும் நிலைநாட்டுப் பண்ணி வச்சிருக்கிறோம். குறிப்புநாடு 32 கிராமத்துக்கும் விபரம், குருமந்தூர், கோசணம், செவியூர் அயிலூர், கொளப்பலூர், அலிங்கியம், முடச்சியூர், கலிங்கியம், ஆதியூர், சிருவலூர், குண்ணத்தூர், அளுக்குழி தாளுன்றி, திங்களூர், முத்தூர், நல்லூர், திருப்பூர், வாய்ப்பாடி, விஜயமங்கை, கூடலூர், சிருக்களிஞ்சி, செங்கப்பள்ளி, மண்ணறை, பாலதொளுவு, அல்லாளபுரம், வெள்ளாவழி, முகுந்தை, கந்தாகண்ணி கொடுமணல், அமுக்கியம், தெக்கலூர், ஊத்துளி இந்த 32 கிராமமும் சருவ அதிகாரம் பண்ணிக்கொண்டு சுகமே யிருக்கும்படிக்கு நாங்கள் மூவாரசக்களும் ஒரு மனசுடனே எழுதிக்கொடுத்த செப்பேடுபட்டயம் யிதுக்கு மதுரை மீனாக்ஷியம்மன் சொக்கநாத சுவாமி பூமி ஆகாசம் சந்திர சூரியர் சாக்ஷி இந்த சாசனப்பட்டயத்தை யிகளிதஞ் செய்தபேர்கள் காசி கெங்கைக்கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்தை அடைவார்கள்.

ஸ்ரீராமஜெயம்.

இக்குறிப்புநாடு மிகக் கீர்த்திமலிந்ததென்பதற்குப் பல பாடல்களும், அத்தாக்ஷிகளும் உள.

## அறுசீர் விருத்தம்.

வேதிய ராசு செல்வம் மிகுந்திடு வணிகர் நல்ல
நீதிவேட் டுவரின் ராச நிலமைகுன் றாத நாடு
மாதுளை மறுக்கை தேமா மல்லிகை தென்னை புன்னை
கோதிலா வனங்கள் சூழ்தென் குறிப்புநன் னாடு தானே.

(பழங்கவித்திரட்டு)

மற்றுள்ள பாடல்களை விரிந்த பதிப்பிற் பிரசுரிக்கப்படும்.

குருகுல மன்னர்கள் கொங்குநாட்டிற்கு வந்து அரசாட்சி புரிய வாரம்பித்ததும் வாழ்ந்த நாட்டைக் குறிப்புநாடு யென்று அழைக்கப்படுகிறது. குறிப்புநாட்டுப் பெருமன்னபரம்பரையினர் இன்றும் திங்களூருக்கடுத்த அப்பச்சிமார் மடத்திற்கு அதிபராயிருக் கின்றார்கள்.

அப்பச்சிமார்மடம் என்பது தென்னுடெங்கும் புகழ்பெற் றதோர் தெய்வஸ்தலம். இத்தலம்பற்றிய பாடல்கள் பல,

## எழுசீர் விருத்தம்.

சந்ரபுரி மாநகரி யிந்ரவோ லக்கமாய்த்
தழைத்திட விளங்கு மடமாம்,
தண்டமிட் கவிவாணர் கொண்டாட வேவந்த
சற்சங்க மான மடமாம்,
விந்தையுட னேமுனிவ ரானமதி யோர்களும்
மெய்ப்பாய்வி ளங்கு மடமாம்,
வீரமிகு ரெணசூர அப்பச்சி மாரய்யன்
வீற்றிருக் கின்ற மடமாம்,
கொந்துலவு குலமாதர் சிந்துநட னம்பாவு
கொலுவலங் கார மடமாம்,
கூறரிய கொங்குமலை யாளமும் ஈழமுங்
கொண்டாட வந்த மடமாம்,
அந்தமிக வாகவே பழனியய் யன்நீதி
அர்ச்சனைகள் செய்யு மடமாம்,
அம்புவியில் மெய்ப்பான அப்பச்சி மாரய்ய
னன்னைந்தந் துதவு மடமே.

(பழங்கவித் திரட்டு)

எனப்பாடல் பெற்றது அப்பச்சிமார்மடம். இங்கு பல நாட் டினரும் வந்து அப்பச்சிமாரய்யன் தரிசனம் பெற்றுத் தங்கள் தங்களின்னல்களைத் தீர்த்து இன்னருள் புரியுமாறு இறைஞ்சி நிற்பர்.

படங்கொண்ட பாம்பலங் காரர்க்கு மாருத பக்திகொண்டு
திடங்கொண்ட நெஞ்சோடு திண்கொண்ட தோள்கொண்டு
சீர்த்திகொண்டு
அடங்கொண்ட பேய்நோய் விடந்தீர்த் தருள்கின்ற வப்பச்சிமார்
மடங்கொண்டு வண்புகழ் கொண்டதன் றேகொங்கு மண்டலமே

என்று கொங்குமண்டல சதகம் (பழைய ஏட்டுச்சுவடி) கூறுகிறது. இத்தகைய மாபெருங் கீர்த்திமலிந்த அப்பச்சிமார்மடத்திற்கு தற்சமயம் மடாதிபதியாயிருப்பவர் உயர்திருவாளர் M. A. ஆண்டமுத்துக் கவுண்டர் அவர்கள். பொதுநல நோக்கமும், வறியோரைக்காக்கும் மனமுமுடையவர். மற்றும் ஸ்தலஸ்தாபனங்களிலெல்லாம் அங்கம்பெற்றுள்ளார். சென்னை மாகாணத்திலுள்ள பெரும் அறிவாளிகளில் இவருமொருவர். தமிழ், ஆங்கிலம், ஹிந்தி முதலிய பாஷைகளை நன்கு பயின்றவர். குறிப்பு நாட்டெல்லைக்குள் வாழும் தமது குடிகளுக்கின்னலேற்பட்ட காலத்து உடன் விலக்கி, இன்பம்பயப்பதே இவரின் மனப்பான்மை. இவருக்கு மூன்று சகோதரர்களுண்டு. மூவரும் நன்கு ஆங்கிலம், செந்தமிழ் பயின்றவர்களே. இவர்களிலொருவர் வழக்கறிஞராகவு (Vakil) மிருக்கின்றார். இவர்களின் தேசமுன்னேற்ற ஆர்வம் இன்றும் என்றும் சுடர்விட்டுத்துலங்கி விளங்குகிறது.

## வல்விலோரி.

மூவேழ் துறை முறையுளி கழிப்பிக்
கோவெனல் பெயரிய காலை யாங்கது
தன்பெய ராகலி னாணி மற்றியா
னாட்டிட னாட்டிடன் வருது மீங்கோர்
வேட்டுவ ரில்லை நின்னொப் போர்...............

(புறநானூறு)

மேற்காட்டிய கவி வல்விலோரியை வன்பரணர் யென்ற-தமிழ் வாணன் இவனது வள்ளன்மைக்காகப் புகழ்ந்து பாடியது. வல்விலோரியின் வாசஸ்தலம் கொல்லிமலை. இம்மலை சேல நாட்டைச் சார்ந்தது. இவன், வள்ளல்கள் இருபத்தொருவரில் தலைசிறந்து

விளங்கியவன். இதிலிருந்து சேலநாட்டையும், அருகாமையிலுள்ள நாடுகளையும், குருகுலமன்னர்களே பரிபாலித்தனரென்றறியவேண்டியிருக்கிறது. இதுவின்றி வள்ளண்மைக்கும் நல்லணிவகுத்த பெருமைவெட்டுவ குலத்தினருக்கே உண்டென்று கூறலாம்.

## கடியநெடுவெட்டுவன்.

முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின் றீதல் யாம்வேண் டலமே,
விறற்சினந் தணிந்த விரைபரிப் புரவி
யுறுவர் செல்சார் வாகிச் செறுவர்
தாளுளந் தபுத்த வாண்மிகு தானை
வெள்வீ வேலிக் கோடைப் பொருந
சிறியவும் பெரியவும் புழைகெட விலங்கிய
மான்கணந் தொலைச்சிய கடுவிசைக் கதநாய்
நோன்சிலை வேட்டுவ நோயிலை யாகுக!
வார்கலி யாணர்த் தரீஇயகால் வீழ்த்துக்
கடல்வயிற் குழீஇய வண்ணலங் கொண்மூ
நீரின்று பெயரா வாங்குத் தேரோ
டொளிறுமருப் பேந்திய செம்மற்
களிறின்று பெயரல பரிசிலர் கடும்பே

(புறநானூறு)

மிகுந்த செல்வத்தையுடைய மூவேந்தராயினும் எம்மைப்பேணுதலின்றி ஈதலை நாங்கள் விரும்போம். வென்றியானுளதாகிய சினந்தீர்ந்த விரைந்த செலவையுடைத்தாகிய குதிரையையுடைய அஞ்சிவந்தடைந்த பகைவர்க்குச் செல்லும்புகலிடமாய் அவ்வாறன்றிப் போர் செய்யும் பகைவர் முயற்சியையுடைய தளர்ந்த உள்ளத்தைக்கெடுத்த வாட்போரின் மிக்க படையினையுடைய வெள்ளிய பூவையுடைத்தாகிய முல்லைவேலியையுடைய கோடையென்னும் மலைக்குத்தலைவ! சிறியனவும் பெரியனவுமாகிய புழைகளைப் போக்கறவிலக்கிய மானினது திரட்சியைத் தொலைத்த கடியசெலவையுடைய சினமிக்க நாயையும், வலியவில்லையுமுடைய (கடியநெடு) வெட்டுவ! நீநோயின்றி யிருப்பாயாக. என மேற்கூறிய கவியிலமைத்துப்பாடிப் புகழ்ந்த பெருந்தலைச் சாத்தனாரின் ஆசை

மழுங்குமாறு பரிசிந்துகாத்த கடியநெடுவெட்டுவ மன்னனைக்கொங்குநாடு நன்கறியும். இவனும் குருகுல மாபைச்சார்ந்தவன்தான். இதுபோன்று வெட்டுவமன்னர்களின் கீர்த்தியையும், வலிமையையும், போர்த்திறனையும் புகழ்ந்து பாடும் புறநானூறு 152, 153, 158, 204, 34, 159, 189, 202, 247, 324 ஆகிய கவிகளிற்காணலாம். ஆகவே, சகலதுறைகளிலும் வெட்டுவமன்னர்கள் மேம்பாடுற்று விளங்கியிருக்கின்றார்கள்.

தீரர்கள் தனைமூ வாசருந் தழுவிச்
சிறைதனி லிருந்திடும் நாங்கள்
வீரர்க ளான வுங்களாற் பிழைத்தோம்
மேவுமெம் மாசிலோர் பாகம்
கூரது செய்து கொங்கினை யளித்தோம்
கொற்றவ ரேயிதை யாண்டு
நேரதா யெங்கட் குதவியா யிருந்து
நிலைத்திட வேண்டுமென் றளித்தார்
(பழங்கவித்திரட்டு)

என்றபடி கொங்குநாட்டின் கோவேந்தர்களாக மகுடஞ்சூட்டப்பெற்ற குருகுல மன்னர்கள் கொங்குநாடெங்கும் பரவி வசிக்கின்றனர். வழக்கப்படி இவர்கள் கவுண்டர், ராயர், வள்ளல் எனப் பட்டப்பெயர் புனைந்துகொள்ளுகின்றனர். "கவுண்டன்" என்னும் பட்டம் தென்னாட்டில் அநேகமாக வேளாளர், வெட்டுவர், வன்னியர் ஆகிய பல வகுப்பினரால் வகிக்கப்படுகிறது. இப்பட்டம் ஒரே பதத்திலிருந்து பிறந்தது. வடநாட்டினர், எதிரிகளுடன் போர்புரிந்து எதிரிகளைக் கைப்பிடியாகப்பிடித்த தளகர்த்தனுக்கு "காமுண்டன்" எனப் பட்டமளிப்பது வழக்கமாயிருந்தது. இது குருகுல மன்னர்கள் தென்னாட்டை யடைந்த பின்னர்தான் தென்னாட்டிலும் வழங்கப்பட்டதென்பது சரித்திரம். கிராமப் பெரியதனக்காரர்களுக்கும் இப்பட்டத்தை (காமுண்டன்) வெட்டுவமன்னர்கள் ஈந்தனர். நாளடைவில் காமுண்டன் காமிண்டனாகி, காவண்டனாகி, காவுண்டனாகி, கவுண்டனாக மருவிற்றென்பது சரித்திரக்காரர்கள் கருத்து. கண்ணுற்ற மற்ற வகுப்பினரும் கவுண்டனென்பது சிறந்த பட்டமென யாவரும் வைத்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். "கவுண்டிக்கை" "ஊர்க்கவுண்டன்"

எனச்சொல்லிக்கொள்ளுவதும் இக்காரணம்பற்றியதே; கவுண்டன் என்று ஒரு பரம்பரையினர்க்குப் பட்டமிருக்குமாயின், அவர்களாவது, அவர்களின் முன்னோர்களாவது, போர்த்தொழிலிற் சிறந்தவர்களாயிருந்திருக்கவேண்டும். அக்காரணஞ் சிறிதுமில்லாமல், கவுண்டன், காமிண்டன் எனப் பட்டஞ் சூட்டிக்கொள்ளும் வழக்கம் கொங்குநாட்டிலுள்ள சிற்சில குடும்பங்களிலிருக்கிறது. ஆகவே, கவுண்டனென்ற பட்டத்தை கொங்குநாட்டிற்குள் புகுத விட்ட பெருமையும், அதை வகிக்கின்ற பெருமையும், கீர்த்தியும், வெட்டுவகுலத்தினருக்கே வுண்டென்பது ஆராய்ச்சி.

மேற்கூறிய புகழ்மலிந்த குருகுலத்தினர் நாளடைவில் வெட்டுவர், பூவலவர், காவல்வர், மாவலவர் வேடர் யென்னும ஐம்பிரிவினராகப் பிரிந்து விளங்கினர், விளங்குகின்றனர். தற்காலம் வெட்டுவர், பூவலவர், வேடர், காவலவர், ஆகிய நாலு பிரிவினரே காணப்படுகின்றனர். மற்றோர் மறைந்திருப்பதற்கும், அருவியதற்கும், தக்க காரணம் அறியக்கூடவில்லை. வெட்டுவகுலத்தினரை வேட்டுவரென்றும் அழைக்கின்றதுண்டு.

சென்னையிலுள்ள ஹமல்டன் பிரிட்ஜ் (Hemilten Bridge) நாளடைவில் அம்பட்டன் வாராவதியென மருவியது போல, பல உண்மைப்பெயர்களை நெடித்தும், குறுக்கியும், புகலுகின்ற பழக்கம் தமிழ் நாட்டில் பண்டைக்காலந்தொட்டு இருந்து வருகின்ற முறையில் வெட்டுவர் என்ற பெயர் வேட்டுவர் என நெடிக்கப்பெற்றுள்ளது.

## வெட்டுவர் பெருமை.

### எழுசீர் விருத்தம்.

கங்கைச் சடைமுடி வெண்ணீச ருக்கன்று
கண்பதித் திட்ட பெரியோர்
கண்ணப்ப சீர்பாத சேகரர் மேலான
காளத்தி வெற்பு முடையோர்
செங்கைசிலை யூன்றியே வில்வத்தி லேறியே
சிவராத்திரி கண்ட பெரியோர்

தெட்சணா புரமென்ற பூமிக்கு முடையவர்
சீரான கீர்த்தி யுடையோர்
கொங்குதல முடையவர் கொற்றவர் கற்றவர்
கொல்லிங்கி ரிக்கு முடையோர்
கூறரிய பாண்டியன் சோழன்சே ரன்வந்து
கொண்டாடு வலிமை யுடையோர்
வங்கக் கட லுலகில் வீரான வெட்டுவர்கள்
வாகைமா லைப்பு யத்தோர்
வாய்வீறு சொன்னவரின் மார்ப்பைப்பி ளந்திடுவர்
வளராச மணவா ளரே.

(பழங்கவித் திரட்டு)

எனப்புகழ்கொண்ட பெரும்பான்மைக் கூட்டத்தினராகிய வெட்டுவமரபினர் இன்று சிறுபான்மையினராகத்தோன்றுவதற்குச் சிறந்த காரணம் கல்வியின்மையும், ஒற்றுமையின்மையுமே. "முயற்சி திருவினையாக்கும்" என்ற முதுமொழிப்படி முயற்சிமிகுமாயின் முன்னேற முடியுமென்பதைக் காலச்சக்கரம் காட்டுகின்றது.

முற்றும்